179813

# மதுரையவர்களும்
# திருவாலவாய் மாணிக்கம்

©

Q23:38-2115
N26
179813

179873

# மதுரையென்னும்
# திருவாலவாய் மாண்மியம்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



மதுரை யென்னும்

# திருவாலவாய் மான்மியம்.

இஃ

மதுரை

திருஞானசம்பந்த சுவாமிகளாதீன வித்வான்
சுந்தரலிங்கக் கவிராயரவர்கள் குமாரரும்,
ஸ்ரீ குமரன் திருவருட் சங்கம் அதிபருமாகிய

## S. கலியாணசுந்தரம் பிள்ளையால்

---

மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

குரோதன வரு

காப்பிரைட்] 1926. [விலை அணா 2.

OFFICE OF THE R
16 FE

17981

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



மதுரை யென்னும்

# திருவாலவாய் மான்மியம்.

இஃது

மதுரை


திருஞானசம்பந்த சுவாமிகளாதீன வித்வான்
சுந்தரலிங்கக் கவிராயரவர்கள் குமாரரும்,
ஸ்ரீ குமரன் திருவருட் சங்கம் அதிபருமாகிய

**S. கலியாணசுந்தரம் பிள்ளையால்**



மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

குரோதன ௵

1926.


[காப்பிரைட்] [விலை அணா 2.]

உ

சிவமயம்.

இதில் யாவரும் எளிதிலுணர்ந்துகொள்ளுமாறு மார்கழிமாதம் அமரபக்கத்து அட்டமி திதியில் நடைபெற்றுவருகின்ற அட்டமிப் பிரதக்ஷண வரலாறும், சாக்ஷாத் சோமசுந்தரக்கடவுள் செய்தருளிய அறுப[illegible] நான்கு திருவிளையாடல்களின் சங்கிரகமும், பன்னி[illegible] மாதங்களிலும் நடைபெற்றுவருகின்ற உத்ஸவாதிகளின் விவரங்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

S. கலியாணசுந்தரம்பிள்ளை.

Q23:39-21195
N6
179813

உ

சிவமயம்.

## மதுரை யென்னும்

# திருவாலவாய் மான்மியம்.

அண்ண லாலவாய் நண்ணி னன்றனை.
எண்ணி யேதொழத் திண்ண மின்பமே.

ஸ்ரீமது அகண்ட சச்சிதாநந்த சாக்ஷாத்கார சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகியும் நின்மல நிர்க்குண நிட்கள நிராலம்ப நித்தியானந்தராகியும் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியவிளையாட்டையுடையராகியும், எவ்வெவர்களுஞ் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப சுகதுக்கங்களையருத்தி முடிவிற்றமது திருவடி நிழலிற் சேர்த்தருளுஞ் சிவகாருண்ணியராகியுமுள்ள சிவபெருமான், விராட்புருஷனுக்குத் துவாதசாந்தஸ்தானமாகக் கொள்ளப்பெற்ற மதுரையம்பதியிலே, பரம குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும்பொழுது, உமாதேவியார் வணங்கி, “சுவாமி! உயிர்கள் கருப்பத்திலே தங்கிப் பிறப்பதும், பின்பு இறப்பதும் பெருந்துன்பத்திற்கும் பெரும் பயத்திற்கும் ஏதுவாதலால், இப்பிறப்பிறப்புக்கடலைக் கடந்து முத்திக்கரையை அடைதற்கும், மறைவாகவும் வெளியாகவுஞ் செய்யப்பெற்ற பாவங்களை எளிதாகக் களைதற்கும் உரிய உபாயத்தை அருளிச்செய்ய வேண்டும்" என்று உயிர்களின்மீதுள்ள கருணையினாலே சிவபிரானிடத்தே விண்ணப்பஞ் செய்ய, அதற்கு சிவபிரான் திருவாய் மலர்ந்தருளுவாராயினர். எங்ஙனமெனில், ஹே தேவி! நம்முடைய மகாதேவ சப்தத்தை உச்சரித்தலால் பெருங்கொடும் பாவங்களெல்லாங் கெடும். நம்மைப் பூசித்தலாலும், நம்மை யுணர்த்தும் ஆசாரியன் அடிமலரை வணங்குதலாலும், நெருப்பிட்ட பஞ்சுப்பொதிபோலப் பாவங்கள் கெட்டொழியும். இன்னும் பெரும் பாதகங்களும் பிறவியும் போதற்குரிய உபாயம் வேதத்திற் கூறப்பட்டிருக்கிறது. அதாவது:—

சம்புத்தீவின் மத்தியில் மேருமலை உள்ளது. அம்மேருமலையின் நாற்புறத்தும் நான்கு மலைகள் உள்ளன. அம்மேருமலைக்கும் சூழவிருக்கும் மலைகளுக்கும் இடையேயுள்ள வெளிக்கு இளாவிருத கண்டமென்று பெயர். அதற்குத் தெற்கிலுள்ள நிடதமலை கீழ்கடல் மேல்கடல்களைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குத் தெற்கே அரிவருடமென்கிற கண்டம் இருக்

கிறது. அதற்குத் தெற்கே ஏமகூடமென்கிற மலை நிடதமலைபோலவேயிருக்கிறது. அதற்குத் தெற்கே கிம்புருடவருடமென்கிற சிறந்தகண்டம் இருக்கிறது. அதற்குத் தென்பாகத்தில் மலைகளிற் சிறந்த இமயமலையிருக்கிறது. அம்மலையில் இமவான் என்னும் மலையரசன் மேனையென்னும் மனைவியோடிருந்தான். அவ்விருவரும் உமாதேவி சமேதராகிய பரமசிவனை உணர்ந்து அப்பெருமான்மாட்டமர்ந்த இருதய கமலத்தோடு கூடியவர்களாயிருந்தார்கள்.

அப்பொழுது சிவபத்தரும் யோகியும் தவமுனிவருள்ளே சிறந்தவருமான துர்வாசமுனிவர், அவ்விமயமலையில் அமர்ந்தருளிய கேதாரநாயகரைப் பூஜை செய்வதற்கு வந்தார். அங்ஙனம் வந்த முனிவரைச் சிவத்தியானமுள்ள மலையரசனும் மேனையும் வணங்காமல் மலைபோல அசையாது சும்மாவிருந்தனர். உடனே அம்முனிவர் கோபங்கொண்டு, அவ்விருவரையும் நோக்கி, "உங்களுக்கு மானுடப்பிறப்பு உண்டாகக்கடவது" என்று சபித்துவிட்டனர். அப்பொழுது பயத்தினாலே மனைவியோடு மலையரசன் அம்முனிவரர் பாதங்களிலே விழுந்து வணங்கி எழுந்து பிரார்த்தித்தபொழுது, அம்முனிவர் கருணைகூர்ந்து மகிழ்ந்து, அம்மலையரசனை நோக்கி, "பூமியிலே சிவபக்தியிற் சிறந்த ஒரு அரசனுக்கு நீ புத்திரனாகப் பிறக்கக்கடவாய். உன்னுடைய பிதாவுக்குச் சமமான வம்சத்திலே உன்னுடைய பத்தினிக்கும் மனிதப்பிறப்பு உண்டாகக்கடவது. நீ அநேக சோமயாகங்களினாலே சிவபிரானை ஆராதித்து, மேனையை விவாகம் பண்ணி இல்லறத்திலிருந்து, தொண்ணூற்றொன்பது அசுவமேதயாகம் செய்து பின்பு புத்திரகாமேஷ்டியாகஞ் செய்யும்போது, சிவாஞ்ஞையினால் சிவபெருமான் திருமேனிப் பாதியில் அமர்ந்தவரும் சித்துரூபருமான உமாதேவியார், அக்கினி குண்டத்தினின்று தோன்றி உனக்குப் புத்திரியாராவர். சிவபெருமான் அப்புத்திரியாரைத் திருமணம் புரிந்து, உனக்கு மருகரும் பாண்டியராஜருமாவர். அங்ஙனம் மகிமையோடு சுகங்களை நுகர்ந்து, இறுதியிலே பத்தினியோடு நீ முத்தியடைவாய்" என்று, பிரதிசாபமிட்டுப்போய், அத்துருவாச முனிவர் அக்கேதாரேசுவரரைப் பூஜித்துக்கொண்டிருந்தார்.

அதன் பின்பு, மலையரசன் தனக்கு ஆசாரியராகிய கண்ணுவ முனிவரிடஞ் சென்று, தன்னுடைய பத்தினியோடும் வணங்கி எதிரே நின்றான். அம்முனிவர் ஞானநோக்கினால், நிகழ்ந்தவைகளை யுணர்ந்து, மலையரசனை நோக்கி "நீ அடைந்த சாபம் எல்லா உலகங்களுக்கும் நன்மையாகவேயிருக்கிறது. நீ இப்பொழுது ஸ்ரீ காசி க்ஷேத்திரஞ் சேர்ந்து அகஸ்



திய மகாமுனிவரைத் தரிசித்து வணங்கி, அவர் அருளிச்செய்யும் வழியே ஒழுகுவாயாக" என்று சொல்லியருளினர்.

உடனே அம்மலையரசன் மனைவியோடும் ஸ்ரீ காசிப்பதி சேர்ந்து கங்காநதியிலே மூழ்கி, விசுவேசரையும், விசாலாக்ஷி தேவியாரையும், அன்னபூரணியம்மையையும், வயிரவக்கடவுளையும் விதிப்படி அன்புடன் பூசித்து, வணங்கித்துதித்து, வலம் வந்தபின்பு, அவ்விசுவேசர் சந்நிதிக்குத் தென்புறத்துள்ள முத்திமண்டபத்தின் மத்தியிலே, அநேக முனிவர்குழாங்களாற் சூழப்பெற்று வீற்றிருக்கும் அகஸ்தியமகா முனிவரைத் தரிசித்து, பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரங்களால் அவருடைய திருவடிகளை வணங்கி, தனக்கு நேரிட்ட சாபமுதலியவற்றை விண்ணப்பஞ் செய்தான். அதற்கு அகஸ்திய மகாமுனிவர், பேரருளோடு மலையரசனை நோக்கி, "துருவாசமுனிவர் சாபமானது உலகத்திற்கும் உனக்கும் நன்மையைச் செய்யத்தக்கதே" என்று சொல்லியருளினார். அங்ஙனம் அருளியதைக்கேட்ட மலையரசன், அகஸ்திய மகாமுனிவரை வணங்கி, "எனக்கு எத்தேசத்திலே மானுடப்பிறவியுண்டாகும்? அதனை அருளிச்செய்யவேண்டும்" என்று கேட்க, அம்முனிவர் "இலக்ஷ யோசனை விசாலமுள்ள சம்புத்தீவின் மத்தியிலே, மேருமலை உள்ளது. அதற்குத் தெற்கே உன்னுடைய இமயமலைக்கும் தென்கடலுக்கும் இடையில், ஒன்பதினாயிரம் யோசனை விசாலமுள்ள பாரதவருஷத்திலே, பாதகண்டத்திலே, ஐம்பத்தாறு தேசங்கள் உள்ளன. அவைகளிலே, பிராமணர் முதலானவர்கள் தங்கள் தங்கள் வருணாச்சிரம தருமங்களிலே வழுவாமல் யாகாதிகளும், தியானாதிகளுஞ் செய்துவருகின்றார்கள். சுயம்புமூர்த்தி முதலாகிய பரார்த்தலிங்கங்களையும் உமாதேவியாரையும் சிவாகமவிதிப்படி பூசித்தற்குரியவர்கள் பூசித்துவருகின்றார்கள். தங்கள் தங்கள் கிருகங்களிலே, வாணலிங்கம், படிகலிங்க முதலியவற்றிலே வேதசிவாகம விதிப்படி ஆன்மார்த்த பூசைக்குரியவர் ஆன்மார்த்த சிவபூஜை செய்துவருகிறார்கள். அத்தேசங்களிலே சோழதேசம் சிவபிரானுக்கு இடக்கண்போலும், சேரதேசம் வலக்கண்போலும், பாண்டிய தேசம் சோதிமயமாகிய நடுக்கண்போலும் உள்ளன. அப்பாண்டி நாட்டிலே, குலசேகரபாண்டியனென்னும் அரசன், பிரபுவாய் எப்பொழுதுஞ் சைவாசாரங்களை அநுட்டிக்கின்றவனாய், சிவலிங்காராதனஞ்செய்கின்றவனாய், குடிகளைக்காப்பதில்முயற்சியுள்ளவனாய், சமஸ்தயாகங்களையுஞ் செய்தவனாய், சூரனாய், ஏக சக்ராதிபதியாய், மதுரைமாநகரத்தில் அரசாண்டுவருகின்றான். அவனுக்குப் புத்திரர் இன்மையால் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரரைத் தினந்தோறும் மனைவியோடு தரிசித்து அப்புத்திரப்பேற்றின்பொருட்டுப் பிரார்த்தித்துக்கொ

டிருக்கிறான். அம்மதுராபுரியின் மகிமை எனக்குமாத்திரந்தெரியும். மற்றொருவருக்குந் தெரியாது. அம்மகிமையிற் சிறிது கேட்பாயாக. எங்ஙனமெனில், அத்திருப்பதியிலே அறுபத்துநாலு கலைகளுஞ் சித்தியாகின்றன. பிரமதேவருடைய பரிமேத வேள்வி முடிவிலே சாபம்பெற்ற சரசுவதி தேவியின் அம்சபூதர்களான சங்கப்புலவர்கள் அனைவரும் சமஸ்த தேசங்களிலுஞ் சஞ்சரித்துப் பின்பு மதுராபுரியை அடைந்தனர். அவர்களுடைய சித்தங்களும், வித்தைகளும் பெரிதுந் தெளிவுபெற்றுள்ளன. அவர்கள் அநேக தேசங்களிலே தனித்தனி அவதரித்தவராயினும் நெடுங்காலம் அம்மதுரைச் சங்கத்திலே அனைவருங்கூடி அமர்ந்தனர். மற்றைய நகரங்கள் வியஷ்டிரூபமாயுள்ளன. மதுரைமாநகரம் சமஷ்டிரூபமாயுள்ளது. அந்த க்ஷேத்திர மான்மியத்தைக் கேட்பதினால் பாதகக்கூட்டங்கள் நாசமடைகின்றன. அப்பதியிலே வசிக்கின்ற மாநுடர் ஜீவன்முத்தர்களே. அதில் ஐயமில்லை. அம்மதுரையம்பதிக்குக் கிழக்கே புஷ்பவனமும், தெற்கே சத்தியகிரியும், மேற்கே ஸ்ரீபத்திரிகாபுரமும், வடக்கே இடபகிரியும் ஆகிய க்ஷேத்திரங்கள் உண்டு. அவ்விடபகிரியில் முருகக்கடவுளின் பாதசரத்திலிருந்து ஒரு நதியுண்டாயிருக்கிறது. அதற்கு நூபுரகங்கையென்னும் பெயர் உலகத்திலே பெரிதும் வழங்கப்படுகின்றது. அம்மலையின் கீழ்ப்பிரதேசத்தின் அருகே விஷ்ணுமூர்த்தி பரமசுவாமியென்னும் பெயருடன் பிரசித்தியோடு வசித்து, அப்பருவதத்தில் அமர்ந்தருளும் முருகக்கடவுளை இருதயத்திலே தியானித்துக்கொண்டிருக்கின்றனர். இங்ஙனம் மேலே கூறிய புஷ்பவன முதலிய நான்கு க்ஷேத்திரங்கள் புடைசூழப்பெற்று நடுநாயகமாய், மிகப்பரிசுத்தமாய் அதிரகசியமாயுள்ள மதுரைநகரம் ஸ்ரீ சக்கரவடிவாயிருக்கிறது. அதனடுவே விந்துவிருக்கிறது. அவ்விந்துவினடுவே சாமளபீடத்திலே ஸ்ரீ மீனாக்ஷிதேவியார் எழுந்தருளியிருக்கிறார். அந்த விந்துவின் ஈசான திசையிலே காமேசரென்னும் பரமசிவன் சுந்தரேசரென்னும் பெயருடன் மூலலிங்கநடுவே அமர்ந்தருளுகின்றார். அவ்விந்துவின் புறத்திலுள்ள முக்கோணத்துக்கு ஆடிவீதியென்றும், அதன் புறத்தேயுள்ள அஷ்டகோணத்துக்குச் சித்திரைவீதியென்றும், அதன் புறத்தேயுள்ள தசகோணத்திற்கு ஆவணிவீதியென்றும், அதற்குப் புறத்திலுள்ள பதினான்கு கோணத்துக்கு மாசிவீதியென்றும், அதற்குப் புறத்திலுள்ள அஷ்டதளங்களுக்குத் தைவீதியாகிய கோட்டைவீதியென்றும் பெயர் உண்டு. அதற்குப் புறத்தே பதினாறுதள ஸ்தானங்களில், இந்திராதிலோக பாலர்களாலே சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குப் புறத்தேயுள்ள மூன்று விருத்தங்களிலே, யோகினிகளும், வயிரவக்கடவுள் முதலானவர்களும் இருக்கின்றார்கள். அந்நகரத்து நான்குவாயில்களிலும் மேற்



கூறியவாறே கிழக்கே திருப்பூவணமும், தெற்கே திருப்பரங்குன்றமும், மேற்கே திருவேடகமும், வடக்கே இடபகிரியுமான நான்கு ஸ்தலங்கள் இருக்கின்றன. பிரசன்ன ஸ்ரீபுரமென்னும் இந்நகரத்துக்குப் பண்டிதர்கள் மதுரை, சீபாரணியம் * முதலான திருப்பெயர்கள் சொல்லுகின்றார்கள். சிதம்பர முதலான சிவக்ஷேத்திரங்களிலே, போகாங்கமாகிய பள்ளியறைக்காலத்திலே, அம்சபூதச்சொக்கரென்று சொல்லப்படுகிறார். இந்த ஸ்ரீ சக்கரமாகிற திருவாலவாயின்கண்ணே போகாங்கமாகிய பள்ளியறைக்காலத்திலே, காமேசுவரரே பள்ளியறைச் சொக்கராகவிருக்கிறார். அந்தச் சொக்கர் காமேசுவரியாராகிய மீனாக்ஷிதேவியாராலே இப்பொழுதும் எப்பொழுதும் சேவிக்கப்படுகிறார். அம்மீனாக்ஷி தேவியாருக்குக் காலபேதத்தினாலே அஷ்டமூர்த்தி பேதமுண்டு. எப்படியெனில், பிராதக்காலத்தில் பாலை என்றும், ஆறு நாழிகைமுதல் ஏழு நாழிகைவரையில் புவனை என்றும், பன்னிரண்டு நாழிகைமுதல் பதின்மூன்று நாழிகைவரையில், கௌரி என்றும், மத்தியானகாலத்தில் யாமளை என்றும், சாயங்காலத்தில் மாதங்கி என்றும், அர்த்தயாமகாலத்தில் பஞ்சதசி என்றும், பள்ளியறைக்கு எழுந்தருளுங்காலத்தில் சோடசி என்றும், மீட்டுந் திருவனந்தலில், சுவாமி பள்ளியறையினின்று எழுந்தருளுஞ் சமயத்திற்குமுன், மகா சோடசி என்றும் பெயராம். ஆகையால், போகாங்கமாகிய அத்திருவனந்தல் சமயத்தில், மாநுடருக்குத் தரிசனம் கிடைத்தல் அருமையாம். அத்திருவனந்தல் தரிசனஞ் செய்யாதவர்களுக்குப் பாசமோசனம் உண்டாகாது. இம்மதுரை பிரசன்ன ஸ்ரீபுரமானதால், தேவியார் ஆராதனம் முதலிலே செய்யவேண்டும். அங்ஙனஞ்செய்யாவிடில், காமேசர் பெரிதுங் கோபங்கொள்ளுவார். பூசாதிரவியங்களெல்லாவற்றையும் இரண்டாகப்பிரித்து முதலிலே தேவியாருக்கு அபிஷேக முதலியன நடாத்தி ஆராதனை செய்த பின்பு, பிற்பாகத்தைக் கொண்டு காமேசருக்கு ஆராதனஞ் செய்தல்வேண்டும். இங்ஙனம் உலகங்களுக்கு அம்மையப்பராகிய இருவருக்கும் ஆராதனம் நடத்தமுடியாதவர்களுக்கு அம்மைக்கு மாத்திரம் ஆராதனம் நடத்துவதே அமையும். குளாகமத்திற் கூறப்பட்ட பூசை இத்திருவாலவாய்க்குப் புறத்தேயுள்ள இடங்களிலே செய்யத்தக்கது. இத்திருவாலவாயினிடத்தே சித்தாந்தமாகிய காமிகாதி சிவாகமங்களினாலே ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரருக்குப் பூசை செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நியாசமும், அர்ச்சனையும், நவாவரண பூசையும்

---

* அத்திருமாநகரின்பேர்சிவநகரங்கடம்பவனமமர்ந்தோர்சீவன்
முத்திபுரங்கன்னிபுரந்திருவாலவாய்மதுரைமுடியாஞானம்
புத்திதரும்பூவுலகிற்சிவலோகஞ்சமட்டிவிச்சாபுரந்தென்கூடல்
பத்திதருதுவாதசாந்தத்தலமென்றேதுவினற்பகர்வர்நல்லோர்.

அவசியஞ்செய்யவேண்டும். இவையன்றி மற்றவைகளெல்லாம் காமிகாகமப்படி செய்யவேண்டும். இங்ஙனம் மீனாக்ஷிதேவியாருக்குக் காமேசுரராலே அருளிச்செய்யப்பட்டது. அதை உனக்குக்கூறினேன். ஆகையால், அம்மையை முதலிலே பூஜித்துப் பின்பு சுந்தரேசுவரரைப் பூஜிக்கவேண்டும். இக்க்ஷேத்திரத்திற்கு † ஒப்பானது ஒன்றுங்கிடையாது. இப்பதியிலே குலசேகர பாண்டியனுக்கு மகிழ்ச்சியோடு நீ புத்திரனாகக்கடவாய். உன்னுடைய பத்தினி சோழராஜனுக்குப் புத்திரியாகக்கடவள். நீ அந்தப் பெண்ணை மணந்து மதுரையம்பதியை ஆளுவாய்" என்று திருவாய் மலர்ந்து அகஸ்தியமகாமுனிவர் சிவத்தியானஞ் செய்துகொண்டிருந்தார்.

பின்பு, அவ்வாறே மலையாசன் குலசேகர பாண்டியனுக்குப் புத்திரனானான். அப்பாண்டிநாட்டில், பொதிகாசலமானது துவஜரூபமாக உயர்ந்துள்ளது. அந்தப் பொதியமலையில், அகஸ்தியமகாமுனிவர் பத்தினியோடு எப்பொழுதும் இருக்கின்றார். குலசேகரபூபாலன், புத்திரன் பிறந்தவுடன் தன் பத்தினியோடு அங்கே தங்கி, புத்திரனுக்கு ஜாதகர்ம முதலிய கிரியைகளைச் செய்து, "மலயத்துவசன்" என்று நாமகரணஞ் செய்தான். அந்தணர் முதலிய நான்கு வருணத்தாரும் "அகஸ்தியமகாமுனிவர் அநுக்கிரகத்தினாற் பெற்ற புத்திரனுக்கு அம்முனிவருக்கு உறைவிடமாகிய மலையினது பெயரையிட்டது பெரிதும் அழகாயிருக்கிறது." என்று மகிழ்ந்து புகழ்ந்தனர். அம்மலயத்துவஜன் பிறைமதிபோல முறையே வளர்வானாயினான். ஐந்தாவது பிராயத்திலே, வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்று சமஸ்கிருதம், திராவிட முதலிய பாஷைகளிலும், யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றிலும் வல்லவனானான். பின்பு ஆறாவது பிராயத்திலே, குலசேகரபாண்டியன் தன்னுடைய குலாசாரியரைக்கொண்டு புத்திரனுக்கு உபநயனஞ் செய்வித்து வேதவேதாங்கங்களையும், தநுர்வேதத்தையும், அஸ்திரப்பிரதியஸ்திர மந்திரங்களையும் முறையே சொல்லுவித்தான். பின்பு புத்திரனுக்கு மணப்பருவம் வந்தவுடனே, சோழராஜனுடைய புத்திரியை விவாகஞ் செய்யக் கருதி முதியோரை அனுப்பி வினவிச் சம்மதித்த பின்னர், அரசர் முதலாயினார்க்கு விவாகப் பத்திரம் விடுத்து, மணமண்டபம் நிர்மாணஞ்செய்துகொண்ட பின்பு சுப முகூர்த்தத்தில், சோழராஜன், தன்னுடைய மனைவியையும், மற்றுஞ்

† திருவாலவாய்க்கிணையாமொருதலமுந்தெய்வமணஞ்செய்யப்பூத்த
மருவார்பொற்கமலநிகர்தீர்த்தமுமத்தீர்த்தத்தின்மருங்கின்ஞான
வுருவாகியுறைசோமசுந்தரன்போலிகபரந்தந்துலவாவீடு
தருவானுமுப்புவனத்தினுமில்லையுண்மையிதுசாற்றின்மன்றே.



சுற்றத்தாரையும், தன்னுடைய ஆசாரியரையும், மற்றைய அந்தணர் முதலானவர்களையும், மற்றும் விவாஹத்திற்கு வரத்தக்கவரையும் தனது அரண்மனைக்கு அழைப்பித்து, அவரவருக்கேற்ப உபசரித்து, அனைவரையும் விவாக மண்டபத்தில் இருத்திய பின்பு, சோழராஜன் எழுந்து நின்று, பெரிதும் மகிழ்ச்சியோடு மருகனுக்கு மதுவர்க்கங்கொடுத்து, தன்னுடைய புத்திரி காஞ்சனமாலையாகிய கன்னிகையைத் தானஞ்செய்தான். பின்பு மலயத்துவஜனும் காஞ்சனமாலையும் மற்றுமுள்ள மணச்சடங்குகளை விதிப்படி முடித்தனர். பின்னர் குலசேகர பாண்டியன் அவ்விருவரையும் சிங்காசனத்தில் ஏற்றி, மகுடாபிஷேகஞ் செய்து மலயத்துவஜனுக்கு முடிசூட்டினான். பின்பு குலசேகரபாண்டியன், மணக்கோலங் காணவந்தவர் அனைவருக்கும் தக்கபடி சன்மானஞ் செய்து, தத்தமிடங்களுக்குச் செல்ல அனுப்பினன். பின்பு புத்திரனுக்கு அரசாட்சியைக் கொடுத்து சில காலஞ்சென்று அவ்வரசன் முத்தியையடைந்தான்.

மலயத்துவஜபாண்டியன், பூமியைப் பரிபாலனஞ் செய்து வரும்பொழுது, புத்திரப்பேற்றை உத்தேசித்து, தொண்ணூற்றொன்பது பரிமேத வேள்வி செய்தான்; செய்தும் தன் கருத்து முற்றுப்பெறாமைபற்றி, புத்திர காமேஷ்டியாகஞ் செய்தான்; செய்யும்போது அந்த யாகாக்கினி மத்தியினின்று மீனாக்ஷிதேவி மூன்று பிராயத்தோடு மூன்று தனங்களுள்ள ஓர் கன்னிகையாகத் தோன்றி மலயத்துவஜ பாண்டியன் முன்பு மிகமகிழ்ச்சியோடு நின்றருளினள். உடனே மலயத்துவஜ பாண்டியன் பெருமகிழ்ச்சியுற்று அக்கன்னிகையை எடுத்துத் தன்னுடைய பத்தினியிடத்தே கொடுத்து அக்கன்னிகைக்கு மூன்று தனங்களுடைமையால், தடாதகையென்று நாமகரணஞ் செய்தான். தக்க பருவம் வந்த பின்பு தடாதகைப்பிராட்டியாருக்கு மகுடாபிஷேகஞ் செய்து முடிசூட்டி அரசாட்சியை ஒப்புவித்துச் சுவர்க்கலோகஞ் சேர்ந்தான்.

தடாதகைப்பிராட்டியார் கன்னிகையாராய் வீற்றிருந்து அரசாட்சி செய்து வந்தார். சிலகாலஞ்சென்று திக்குப்பாலகரைவென்று திருக்கைலாசபதியாகிய சுந்தரேசுவரரைத் திருமணஞ்செய்து, அந்தக் காமேசுரராகிய சுந்தரேசருக்குத் தம்முடைய அரசாட்சியை மகிழ்ச்சியுடன் கொடுத்து, அவர் ஆஞ்ஞையின் வழியிலே நின்று மாதாவுடன் அந்தப்புரத்தில் அமர்ந்திருந்தார்.

சுந்தரேஸ்வரர் சுந்தரபாண்டியரென்னும் திருப்பெயர் பூண்டு, திருநந்திதேவர் முதலாயினாரை அமைச்சர் முதலாயினாராக்கி, அரசாட்சி செய்துகொண்டிருந்தார். இருக்கும்போது மாமியாகிய காஞ்சனமாலையின் பொருட்டு,

எழுகடலையும் வருவித்து, அவனோடு ஸ்நானஞ்செய்தற்குக் காத்திருந்த மாமனாகிய மலையத்துவஜனை வருவித்து எழுகடற்றீர்த்தத்திலே மூழ்குவித்து, சாரூப்ய பதவியைக்கொடுத்தருளினர். பின்பு, சுந்தரபாண்டியர் மதுரையம்பதியில் வதிந்தருளி அறுபத்தாறாயிரம் வருஷம் அரசாட்சிசெய்து, குமாரராகிய உக்கிரபாண்டியருக்குப் பட்டாபிஷேகஞ் செய்து வேல், வளை, செண்டு கொடுத்து, தடாதகைப்பிராட்டியாராகிய தேவியாரோடும் அந்தர்த்தானமாயினர்; ஆகையால், இத்திருவாலவாய்க்கு நிகரான க்ஷேத்திரம் *கிடையாது. மகாபாதகங்களைச் செய்தவர்களும் அந்த க்ஷேத்திரத்திலே தங்கினால், அப்பாதகங்கள் † நாசமாம்.

ஆதலால், தேவியே! அத்திருவாலவாயில் முன்பு ஒரு சரித்திரம் நடந்திருக்கின்றது. அதனைக் கேட்பாயாக. என்னவெனில், திருப்பரங்குன்றத்துக்கு நிருதிதிக்கிலே, திருமங்கலம் என்னும் கிராமத்தில், ஆத்திரேய கோத்திரத்தில் ஒரு பிராமணன் இருந்தான். அவன் வேதவேதாங்கமாதி நூல்களைக் கரைகண்டவன். வேதோக்த சிரௌதக்கிரியையும், சூத்திரோக்த ஸ்மார்த்தக்கிரியையும் பிறருக்குச் செய்விப்பதிலே சமர்த்தன். ஆயினும், வேதாந்தார்த்தங்களைப் புகழின் பொருட்டுச் சமஸ்தருக்கும் போதிக்கின்றவன். பலவழியாலும் பொருளைத் தேடுகின்றவன். நீசனிடத்துங் கொடிய தானங்களை ஏற்பவன். பெரிதுங்கொடியவன். மதுபானஞ் செய்பவன். ஸ்மார்த்தன்போலும் வேடம் பூண்டவன். எப்பொழுதும் பிறரை வருத்துகின்றவன். பிறர் மனைவியரோடு கூடுகின்றவன். கோபிச்சந்தனத்தால் ஊர்த்துவபுண்டரம் இட்டுக்கொண்டு, விபூதி ருத்திராக்ஷங்களை இகழ்கின்றவன். அமங்கலியும், மலடியுமான மருகியுடன் சேர்கின்றவன். எல்லாச் சித்தாந்தங்களையும் நிந்திக்கின்றவன். எல்லாராலுங் கொடும்பாவி என்று பேர்பெற்றவன். அவன் அங்ஙனமிருந்தபோது, அக்கிராமத்திலே மற்றொரு பிராமணன் கத்தரித்தோட்டம் வைத்து விருத்திசெய்து, அக்காய்களை கொடும்

*இத்தலத்துக்கொப்பாகவொருதலமும்பொற்கமலமென்னுமிந்த
வுத்தமமாதீர்த்தத்துக்கொப்பதொருதீர்த்தமுமெய்புணர்ஞானத்த
வித்தனையவிலிங்கமிதற்கொப்பாவோரிலிங்கமும்பார்விண்மேலென்று
முத்தலத்துமிலையந்தமூர்த்திதிருநாமங்கண்மொழியக்கேண்மின்.

†அன்னியதலங்கடம்மிலாற்றியபிரமகத்தி
பொன்னினைக்களவுசெய்தல்கள்ளுண்டல்புனிதவாசான்
பன்னியைப்புணர்தலென்னபாதகமனைத்துமென்றுந்
தன்னிகராலவாயில்வதிபவர்தமைவிட்டேகும்.



பாவி தவிர மற்றைய அந்தணர் அனைவர்க்குந் தினந்தோறும் கொடுத்து வந்தான். அக்காய்களைப் பாகஞ்செய்து அனைவரும் நுகர்ந்து மகிழ்ந்தார்கள். ஒருதினம் திருக்கோயிலுக்குச் சிவதரிசனஞ் செய்யவந்த கத்தரித்தோட்டப் பிராமணனைக் கொடும்பாவி கண்டு, குரோதகரமாகப் பலவாறு அவமதித்து நிந்தித்து ஒரு காலால் உதைத்தான். உதையுண்ட பிராமணன், உடனே பாண்டியராஜனிடத்தே சென்று நிகழ்ந்தவைகளைத் தெரிவித்தவளவில் பாண்டியன் அத்தாணிமண்டபத்தே அமர்ந்து, அமாத்தியர் முகமாகக் கொடும்பாவியை அழைப்பித்து, விசாரிக்கும்போது, "கத்தரிக்காய் மாமிசத்திற்கு ஒப்பானதால் அது தள்ளத்தக்கதேயன்றிக் கொள்ளத்தக்கதன்று. அதனை உண்பவனும் சண்டாளனே ஆகையால், அந்தச் சண்டாளன் ஆலயத்திற்கு வந்ததுபற்றி ஆலயத்திற்குச் சம்புரோட்சணம் செய்யத்தக்கதே ஆனதால், அப்பிராமணனை வைது உதைத்தேன்" என்று கொடும்பாவி கூறினன். அங்ஙனம் கொடும்பாவி கூறிய மொழியை அரசன் முதலாயினர் கேட்டு ஆச்சரியம் அடைந்தார்கள். அப்பொழுது அகஸ்திய மகாமுனிவர் பொதியமலையினின்றும் போந்தனர். உடனே அரசன் முதலாயினர் எழுந்து அகஸ்தியமகாமுனிவரை வணங்கி, "ஹே குருமூர்த்தி! வழுதுணங்காய் வரலாற்றைச் சொல்லியருளவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்ய, அதற்கு முனிவர் மொழிந்தருளுகின்றனர். "ஹே பாண்டியபூபாலா! பஞ்சமேட்டிராசனுடைய மைத்துனன்போன் வார்த்தாகன் என்னும் பெயருடைய ஒருவன் சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராட்சங்களைத்தரித்து எப்பொழுதும் நம்மையுடையனுமிச் சிவபூஜை செய்துகொண்டிருந்தான். அங்ஙனமிருக்கும்போது ஒருதினம் உடையவராகிய சிவலிங்கப்பெருமானுக்குக் கவயிருங்கத்தினாலே ஸ்ரீ ருத்திரமந்திரங்களை உச்சரித்து அபிஷேகஞ்செய்துகொண்டிருக்குஞ் சமயத்திலே, வைகுண்டத்திலிருந்து கருடாரூடராக விஷ்ணு வந்தனர். வந்தவுடன் எழுந்து விழுந்து வந்தியாமல் மரம்போலிருந்தமையால், விஷ்ணுகோபித்து, "வார்த்தாகனே! கற்பமுடிவுவரையில் விரைவாக நீசெடியாகக்கடவாய்" என்றும், "அச்செடியில் உண்டாகிய காயும் புசித்தற்குரியதாகாது போகக்கடவது" என்றும் சபித்து, சுவேத தீவுக்குப் போயினர். அதன் பின்பு வார்த்தாகராஜன், தனக்குண்டான சாபத்திற்குப்பயந்து சிவபிரானைப்பல முறை புகழ்ந்து, விஷ்ணு சாபத்தை அகற்றும்படி பிரார்த்தித்து, மீட்டும் விசேடமாக அர்ச்சனைசெய்து சந்நிதியிலே நின்றான். நிற்கும்போது, அவ்வருட்குறியினின்று சிவபெருமான் தோன்றி, "நம்மாட்டுப் பேரன்புள்ள வார்த்தாகனே! உன்னுடைய பூஜையால் யாம் மகிழ்ச்சியுற்றேம். நமதருட்குறியை நீ பூசித்தமையால் விஷ்ணுவின் சாபத்துக்கு அஞ்சவேண்டாம்; உனது காய

சம்பந்தமான வார்த்தாக சாகக்கறியானது பிராமணர் முதலான சமஸ்தருக்கும் புசித்தற்குரியதும், சுகத்தைப்புரிவதும் ஆகுக. விஷ்ணுவுக்கும் விஷ்ணு பத்தருக்கும் உனது சாகம் உரிமையாகாது போகுக. நாம் உனது கறியின் நைவேத்தியத்தினால் மிக மகிழ்வோம். பரான்னம் புசித்த குற்றமும் உனது சாகத்தைப் புசித்தலால் அற்றொழியும். உனது சாகமானது முன்னோடு கூடியிருத்தால், பிதிர் சிரார்த்தங்களுக்கு உரித்தாகுக. நம்முடைய பூஜையை உனது கறியின்றிச் செய்தால், அது விஷ்ணு பூஜையாமன்றி நமது பூஜையாக மாட்டாது. நமது பூஜைக்குரிய நைவேத்தியங்களுள்ளே உனது சாகம் முக்கியமாதலால், நம்முடைய அன்பர்களுக்கு நீ விருப்பமுடையவனாகுக" என்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினார். ஆகையால் "வழுதுணங்காய் தள்ளத்தக்கதன்று. கொள்ளத்தக்கதே" என்று சொல்லி அகஸ்திய மகாமுனிவர் ஆகாயமார்க்கமாக ஸ்ரீ காசிக்ஷேத்திரஞ் சேர்ந்தனர். உடனே பாண்டியராஜன் கொடும்பாவியை மாணபரியர்தம் சிறைக்களத்திற் சேர்ப்பித்தான். பின்பு பாண்டியன் வார்த்தாகபால வேதியனை நோக்கி, "இனி, கொடும்பாவிக்கு அஞ்சாதே" என்று தனமுதலியவற்றால் உபசரித்துக் கிருகத்துக்கு அனுப்பிவிட்டு, அரசாட்சிசெய்துகொண்டிருந்தான். பின்பு அக்கொடும்பாவி சிறைக்கூடத்தில் விலங்குடன் கிடந்து பசியால் வருந்தித் தானே மரணமாயினான். உடனே இயமதூதர் வந்து அக்கொடும்பாவியைப் பாசத்தாற்கட்டி இயமராஜனிடத்துக் கொண்டுபோய் விட்டனர். அப்பொழுது இயமன் சித்திரகுப்தனை அழைத்து விசாரித்து, அக்கொடும்பாவியைக் காலசூத்திர முதலிய நிரயங்களிலே கற்பமுடிவுவரையிற போடும்படி ஆஞ்ஞாபித்து அந்தப்புரத்துக்குச் சென்றனன். இயமன் ஆஞ்ஞைப்படி அக்கொடும்பாவி சிலகாலம் வரை நரகங்களிலே துன்பம் அநுபவித்து, திருவாலவாயில் மரணமுற்றமையினாலே சிவாஞ்ஞைபற்றி அம் மதுரையம்பதியின் அக்கினிதிக்கிலே, சிந்தாமணியென்னும் கிராமத்தில், தாமந்த இடையர் குலத்தில், தன்னுபட்ட நரிடையனுக்குப் பிள்ளையாகப்பிறந்தான். முன் செய்த தீவினையால், எப்பொழுதும் பிராமணரை நிந்தித்தல், கள்ளுண்டல், பிறர் மனைவியரைப்புணர்தல், கள்ளர்க்கு ஒற்றுமையாயிருத்தல், புலால்விற்றல், சைவவைணவர்களை நிந்தித்தல், ஒரு கொள்கையுமின்றி நாஸ்திகனாயிருத்தல் என்னுங் கொடுஞ்செய்கைகளுடையவனாயிருந்தான். அப்பாவியைப் பிறவிக்கடலினின்றும் எடுத்து முத்திக்கரையிற் சேர்க்கவேண்டும் என்று, சுந்தரேசர் திருவுளங்கொண்டு, சமீபத்திலிருக்கிற மீனாட்சிதேவியை நோக்கி "ஹே தேவி! "அக்கொடும்பாவியாகிய இடையனுக்கு முத்தி கொடுக்கவேண்டும். அவன் கொடும்பாவியாயினும் எப்பொழுதும் நமதருளினாலே வேளாண்மை நிமித்தம் பசுக்களைப் பரி


ரு4813

பாலனஞ்செய்து வருகின்றான். ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு குரோசதூரபூமி சேர்க்கின்றான். ஆயினும், பிராமணர் பூமிதவிர மற்றையோர் பூமிகளைச் சேர்க்கின்றான். தரிசுகளான காடுகளைத் திருத்துவதிலே பெரிதுங் கருத்துடையவன். இப்பெற்றியுடையானுக்கு முத்திகொடுத்தால் நமக்குப் பெரும் புகழாம். அதற்குவேண்டும் உதவி நீ செய்யவேண்டும். அஃதென்னையெனில், நீ பசுவாகி, அவ்விடையன் வயலிலேயுள்ள பயிரை மேய்வது போலக் காட்டினால், அவன் தடிகொண்டு அடிக்கவருவான். அப்போது நீ ஓடுதலைச்செய்தால் அவனும் வேகத்துடனே உனதுவாலைக் கைகளாற் பற்றிக்கொண்டு ஓடிவருவான். நீ இத்திருப்பதியின் கோட்டைவீதி முதல் அஞ்சுவீதிகளிலும் வலம்வரு முறையாகவே சுற்றிக்கொண்டு, ஆடிவீதியில் நமது சந்நிதியிலிருக்கின்ற இடபத்தின் பின்னே அக்கொடும்பாவியைத் தள்ளிவிட்டுப் பசுவடிவை ஒழித்து நமதருகிலே தங்கக்கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். தேவியாரும் சிவபிரான் ஆஞ்ஞைப்படி உடனே கோவடிவெடுத்து, அக்கொடும்பாவியின் கழனியிலே போய் மேய்வதுபோல நின்றார். உடனே அவ்விடையன் அப்பசுவைத் தடிகொண்டு புடைக்கவரும்போது, அஞ்சி ஓடவும், அதன் வாலை அவ்விடையன் கைகளால் நன்றாகப் பற்றிக்கொண்டு தொடர்ந்து, கீழ்த்திசை முதலாக முறைப்படி கோட்டைவீதி, மாசிவீதி, ஆவணிவீதி, சித்திரைவீதி, ஆடிவீதி என்னும் ஐந்து திருவீதிகளையுஞ் சுற்றிக்கொண்டு ஆடிவீதியிலே சுந்தரேசுவரரது சந்நிதியிலிருக்கிற இடபதேவரின் பின்புறத்தே அவ்விடையனை வீழ்த்தி, கோவுருவை மறைத்துத் தேவுருவங்கொண்டு சுந்தரேசருடனே ஆலயத்தில் அமர்ந்தருளினார். விழுந்தவன் தூலசரீரத்தைவிட்டுச் சூக்குமசரீரத்தோடு தேவவிமானத்தேறித் தேவர்கள் உபசரிக்கும்படி நிற்கும்போது, சுந்தரேசர் உமாதேவிசமேதராக இடபாரூடராய்த் தரிசனங்கொடுத்து, "கோபாலா! உன்னாற் செய்யப்பட்ட பாவக்கூட்டம் முழுவதும் நம்முடைய கருணாலேசத்தாலே ஒழிந்தன. ஆகையால் நீ சுத்தாத்மாவாய் நித்தமும் நமது கயிலாயத்திலே வசிப்பாய்" என்று திருவாய் மலர்ந்தருளி, உனக்கு முத்திகொடுத்த இத்தினமாகிய மார்கழிமாதத்துக் கிருஷ்ணபட்ச அட்டமியில், யாவராயினும் பொற்றாமரைத் தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, நித்திய நியமங்களை நிறைவேற்றி, சூரியோதயகாலத்தில், கிழக்குத்திசைமுதலாகத் தொடங்கி, அன்புடன் வாக்கினாலே, வேதபாராயணமாதல், ஸ்ரீ ருத்திரபாராயணமாதல், தேவாராதிதிருமுறைப்பாராயணமாதல், ஸ்ரீ பஞ்சாட்சர ஜபமாதல் செய்துகொண்டும், மனதினாலே தியானித்தும், காயத்தினாலே தைவீதியையும், மாசிவீதியையும், ஆவணிவீதியையும், சித்திரைவீதியையும், ஆடிவீதியையும், திருக்கோயில் இரண்டாம் பிரகாரத்தையும்,

R23:35:2119.5
NDO

முதற் பிராகாரத்தையும் வலம்வந்து, சித்திவிநாயகக்கடவுளையும், முருகக்கடவுளையும், மீனாட்சியம்மையையும் நமஸ்கரித்து, தரிசித்து, துதித்துப் பிரதக்ஷிணஞ்செய்து, பள்ளியறைக் காமேசுவரியம்மையையும் மனசினாலே சிந்தித்துக்கொண்டு, வலமுறையாகச் சந்நிதியிற்போய், நமஸ்கரித்து துவஜஸ்தம்பத்துக்கு ஈசானதிக்கிலிருக்கிற கனகரத்ந சபையிலே திருநிருத்தஞ்செய்யும் நடராஜமூர்த்தியைத் தரிசித்துத் துதித்து வலம்வந்து, பின்பு மூலலிங்கமூர்த்தியைத் தரிசித்துத்துதித்து, வெள்ளியம்பலவாணரையும், சந்திரசேகரரையும், தக்ஷிணாமூர்த்தியையும், சோமாஸ்கந்த மூர்த்தியையும், மற்றைய மூர்த்திகளையும் தரிசித்துத் துதித்து வெளியில் வந்து, சந்நிதியிலே நமஸ்கரித்து, வடதிசை நோக்கி யிருந்து, ஸ்ரீருத்திரம் பதினொரு முறையும், ஸ்ரீபஞ்சாட்சரம் ஆயிரத்தெட்டுருவும் மேதாவித்தியாசிற்சத்தி மந்திரங்களும் ஜபித்துத் தங்கள் கிருகங்களை அடையக்கடவர். அடைந்து, தங்கள் பொருளுக்கேற்ப நெய், தேன், தயிர் மூன்றோடு சிவபத்தர்களாகிய அந்தணர்களுக்கும் அடியார்கட்கும் மகேசுரபூசை செய்வித்துப் பின்பு சேஷத்தைப் புசித்து ஆசீர்வாதம் பெறக்கடவர் என்றருளினர். புத்தி முத்திகளை விரும்புவோர் வருஷந்தோறும் முறையாக இங்ஙனம் நடத்தல் வேண்டும். மார்கழி மாதம் அபரபட்சத்து அட்டமித் திதியில் எவ்விடத்தே யிருப்பினும், அவ்விடத்துள்ள சிவாலயத்திலே சுந்தரேசுவரரை மனதிலே தியானித்துக்கொண்டு, ஏழுவீதிப் பிரதக்ஷிணத்தையுஞ் செய்யவேண்டும். அப்படி ஏழு வீதியில்லாவிடில் இருக்கிற வீதியில், ஏழு பிரதக்ஷிணஞ் செய்து, முன் சொல்லிய வண்ணம் ஸ்ரீருத்திரபாராயண முதலியன செய்தல் வேண்டும். சிவாலயமில்லாதவூரில் வில்வவிருட்சத்தைப் பிரதக்ஷிண முதலியன செய்தல் வேண்டும். பிரதக்ஷிணஞ் செய்யாதவரையில் பாசக்கட்டு மாநுடர்க்கு நீங்காது. அட்டமிப்பிரதக்ஷிணஞ் செய்வதால், ஒரு அடிக்கு ஒரு * அசுவமேதயாகஞ் செய்த பலன் உண்டாகும். எந்த வருணத்து ஆடவராயினும், மகளிராயினும், சண்டாளராயினும் பிரதக்ஷிணம் புரிந்தால், அவர் முத்தியடைவது நிச்சயம். தைவீதி முதலாக ஏழுவீதியையும் வலம்வர முடியாதவர் ஆடிவீதியையே ஏழுமுறை வலஞ்செய்தால் ஏழு வீதியையும் வலஞ்செய்த பலனை அடைவர். பின்னும் ஸ்ரீருத்திரபாராயணம் ஒருமுறை செய்தாலும், பதினொருமுறை செய்த பயனை அடைவர். ஸ்ரீ பஞ்சாட்சரம் நூற்றெட்டுரு ஜபஞ் செய்தாலும் ஆயிரத்தெட்டுரு ஜபம்செய்த பயனை அடைவர். சிவபத்தியுடைய வேதியர் பதினொருவருக்காவது, சைவசந்நியாசி ஒருவருக்காவது அன்புடன் பூசித்து அன்னம் உண்பித்தால் பெரும்பயன் பெறலாம். பாசநீக்கத்தின் பொருட்டு உமாதேவி சமேதராகிய பரசிவோபாசனை செய்து பரசிவ பூஜை செய்தல்வேண்டும். முத்திக்கு நேரே காரணமாகிய சிவஞானம் ஆசாரியர் திருவருளாலன்றிக் கிட்டாதாகையால் அவ்வருட்குரவரது திருவடிகளையே வழிபடல் வேண்டும். இம்முறையாக, கந்தபுராணத்திலே, பிரமசங்கிதையிலே, முப்பத்து நான்காம் அத்தியாயத்திலே, குருகீதையிலே கூறப்பட்டிருக்கின்றது.

* அடிதொறு மசுவமேத யாகத்தின் பலம தாகும்
படிதனைப் பார்த்து மெல்லப் பதத்தினை வைத்துக் கீட
மடியுமெய் வருந்து மென்றே மனத்தனி லுருகிச் செல்க
வடிகளா லயத்து வட்டத் தகத்துனி யமலன் பாதம்.

நிறைந்தகர்ப்பிணிதானெண்ணெய்நிறைகுடந்தலையின்மீதே
யுறைந்திடநிகளங்காலினுறமெலநடத்தல்போல
மறந்திடாதமலன்பாதமனத்துறவலமுஞ்செய்க
சிறந்தவைந்தெழுத்துஞ்செப்பிச்செபவடங்காத்திற்சேர்த்தே.



## பிரமோத்தரகாண்டம்.

கண்ணுதலா னைநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நாவே நாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலங் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவிளையாடல் விளக்கம்.

திங்களணி திருவால வாயெம் அண்ணல்
  திருவிளையாட் டிவையன்பு செய்து கேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வ மோங்கித்
  தகைமைதரு மகப்பெறுவர் பகையை வெல்வர்
மங்கலநன் மணம்பெறுவர் பிணிவந் தெய்தார்
  வாழ்நாளு நனிபெறுவர் வானு டெய்திப்
புங்கவரா யங்குள்ள போக மூழ்கிப்
  புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்.

அகண்டாகார சச்சிதானந்த சொரூபராகிய சிவபெருமான் மெய்யன்பு பூண்ட அடியார்பொருட்டு கருணைத் திருமேனி தாங்கி வெளிப்பட்டு இக்கில வுலகின்கண்ணே அநேக க்ஷேத்திரங்களில் அங்கங்கே சிற்சில திருவிளையாடல்கள் செய்திருப்பினும் தலவிசேடமும், தீர்த்தவிசேடமும், மூர்த்திவிசேடமும் ஒருங்கே அமையப்பெற்றதும் "மூலைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" என்ற தமிழ்மறையின்படி எல்லாவற்றிற்கும் முதலிலே தோன்றியதுமான துவாதசாந்த க்ஷேத்திரமாகிய திருவாலவா யென்னும் மதுரையம் பதியில் செய்தருளிய திருவிளையாடல்களாவன:—

1. தேவேந்திரனைப் பற்றிய பழி தவிர்த்தருளியது.
2. ஐராவத மென்னும் வெள்ளையானைக்குச் சாபந் தீர்த்தருளியது.
3. கடம்பவனத்தை (மதுரை) நகரமாக்கியது.
4. உமாதேவியார் மலையத்துவச பாண்டியன் தவத்திற் கருள்கூர்ந்து தடாதகைப் பிராட்டியாராகத் திருவவதாரஞ் செய்தருளியது.
5. சோமசுந்தரப் பெருமான் சௌந்தரபாண்டியராக வந்து தடாதகைப்பிராட்டியாரை மணம் புரிந்து அரசு செய்தருளியது.
6. பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்கள் நிமித்தம் வெள்ளியம்பலத் திற்றிருநடனங் காண்பித்தருளியது.
7. தடாதகைப்பிராட்டியார் பொருட்டுக் குண்டோதரனுக்கு அன்ன மிட்டருளியது.



8. அக்குண்டோதரனுக்கு அன்னக்குழியும் வைகையு மழைத்தருத்தி யருளியது.
9. தடாதகைப் பிராட்டியாரின் தாயாராகிய காஞ்சனமாலையம்மை தீர்த்தமாடுவதற்கு எழுகடலழைத்தருளியது.
10. அக்காஞ்சனமாலை யம்மையின் கணவராகிய மலையத்துவச பாண்டியனிறந்து சுவர்க்கத்திலிருந்தவரை வரவழைத்தருளியது.
11. தடாதகைப் பிராட்டியாரிடத்து உக்கிரகுமாரனைத் திருவவதாரஞ் செய்வித்தருளியது.
12. உக்கிரகுமார பாண்டியனுக்கு பகைகளை வெல்ல வேலும் வளையும் செண்டுங் கொடுத்தருளியது.
13. இம்மதுரைமா நகரமீது வந்த கடல்சுவற உக்கிரகுமார பாண்டியனால் வேல்விடுக்கச்செய்தருளியது.
14. உக்கிரகுமார பாண்டியனோடு எதிர்த்த தேவேந்திரன் முடிசிதைய வளையெறியும்படி செய்தருளியது.
15. மகாமேரு மலைப்பக்கத்திலுள்ள பொன்னறையின் பொக்கிஷத்தை யெடுக்கச் சென்ற உக்கிரகுமார பாண்டியனுக்கு வணங்கிவராத மேருவைச் செண்டாலடிக்கச் செய்தருளியது.
16. வேதத்துக்குப் பொருளறியாது மயங்கிய சனகாதிரிஷி முதலிய முனிவர்குழாங்களுக்குப் பொருளருளிச் செய்தது.
17. அபிஷேக பாண்டியனுக்கு முடிசூட்டும் நிமித்தம் மாணிக்கம் விற்றருளியது.
18. வருணன் இம்மதுரைமீதேவிய கடலை வற்றச்செய்தருளியது.
19. வருணன் மதுரைநகர முழுவதையும் அழித்துவிடும்படி ஏவிய மழையைத் தடுத்து இந்நகரத்தை நான்மாடக்கூடல் ஆக்கியருளியது.
20. எல்லாம்வல்ல சித்தராய் எழுந்தருளிச் சித்து விளையாடியருளியது.
21. அத்திருவிளையாட்டை அறியாது பரீக்ஷித்த அபிஷேக பாண்டியனுக்காகக் கல்லானையைக் கரும்பருந்தச் செய்தருளியது.
22. மதுரை நகரை அழிப்பதற்கு சமணர்களேவிய யானையை எய்தருளியது.
23. கௌரியம்மை யென்னும் பார்ப்பனமாதின் அன்பிற்கிரங்கி விருத்தராயும், குமாரராயும், பாலராயுமிருந்து அனுக்கிரகஞ் செய்தருளியது.

24. சிவபெருமான் ஆனந்த வடிவமாய் வெள்ளியம்பலத்தின்கண் நின்று செய்தருளும் திருநிருத்தத்தில் வைத்த அன்பு மிகுதியினால் அந்நிருத்த வருத்தமுணர்ந்த இராசசேகர பாண்டியன் வேண்டுகோட்கிரங்கிக் கால்மாறி யாடியருளியது.

25. கொலைக்குற்றஞ் சுமத்தப்பட்ட வேடனது பழிக்கஞ்சி வணிகனது கலியாணத்திற் சாக்ஷி காண்பித்தருளியது.

26. தாயைக் கலந்து தந்தையைக் கொன்ற வேதியனாகிய கொடிய பாவிக்கு மாபாதகந் தீர்த்தருளியது.

27. வாள்வித்தையால் சீவனஞ் செய்துவரும் ஆசிரியன் மனைவியை வலிமை செய்த சித்தனென்னும் மாணாக்கனது அங்கங்களை வெட்டியருளியது.

28. மதுரைமாநகரத்தை அழிக்கச் சமணர்களேவிய நாகத்தை எய்தருளியது.

29. மதுரையை அழிப்பதற்குச் சமணர்களேவிய மாயப்பசுவை வதைத்தருளியது.

30. சுந்தரசாமந்த னென்னுஞ் சேனாபதியின் பொருட்டு போர்ச் சேவகராய் மெய்க்காட்டிட்டருளியது.

31. பஞ்சம் வந்த காலத்து குலபூஷண பாண்டியனுக்கு உலவாக் கிழி (பொன்) கொடுத்து இரக்ஷித்தருளியது.

32. தாருகாவனத்து இருடிகளின் சாபத்தினால் பத்தினிகள் வைசியப் பெண்களாக வர அவர்களுக்காக வளையல் விற்றருளியது.

33. இயக்கர்மாதர்களுக்கு அட்டமாசித்தி உபதேசித்தருளியது.

34. சோழராஜன் பொருட்டு கதவு திறந்ததினாலழிந்த மீனமுத்திரைக்குப் பதில் இடபமுத்திரை வைத்தருளியது.

35. இராஜேந்திர பாண்டியன் படைக்கு உதவியாகத் தண்ணீர்ப் பந்தல் வைத்தருளியது.

36. திருப்பூவணத்திலுள்ள பொன்னனையாள் என்னும் உருத்திர கணிகையின் பொருட்டு இரசவாதஞ் செய்தருளியது.

37. சுந்தரேசபாதசேகர பாண்டியனை வெல்லக் கருதிவந்த சோழனை மடுவிலாழ்த்திப் பாண்டியனை ரக்ஷித்தருளியது.

38. அடியார்க்கு நல்லான் எனப் பெயர்பெற்ற ஒரு வேளாளன் பொருட்டு உலவாக்கோட்டையருளியது.



39. தாயத்தார்கள் வழக்கிற் செய்ய மருமகனுக்காக மாமனாகவந்து வழக்குத் தீர்த்தருளியது.

40. வரகுண பாண்டியனுக்கு சிவலோகத்தை இம்மதுரைமாநகரில் காட்டியருளியது.

41. பாணபத்திரனுடைய இசைவல்லோன் பகையைத் துரக்கும் பொருட்டு விறகு சுமந்தருளியது.

42. பாணபத்திரனுக்காகச் சேரமான் பெருமாள் நாயனாருக்குத் திருமுகம் கொடுத்தருளியது.

43. பாணபத்திரர் எவ்வித இடையூறுற்றபோதிலும் பாடும் நியமந் தவறாரென்பதை உலகத்தார்க்குக் காட்ட சிவபெருமான் பெருமழை பெய்வித்து அம்மழையிலே நனைந்துவந்து பாடியதற்குப் பலகை கொடுத்தருளியது.

44. பாணபத்திரன் மனைவி ஈழதேசத்திலிருந்துவந்த விறலியை இசைவாது வெல்லச் செய்தருளியது.

45. சுகலனுடைய புத்திரர் பன்னிருவர் பிருகஸ்பதியின் சாபத்தால் பன்றிகளாய்ப் பிறந்தும் தாய் தந்தையர்களை இழந்தும் பாலை விரும்பி பசியால் வருத்தமுற்ற பன்றிக்குட்டிகள்மீது திருவுளமிரங்கி முலைப்பால் கொடுத்தும் அவைகளைப் பன்றிமுகமாகவும் மனிதவுடம்பாகவுமாக்கி வலிமையையும் ஞானத்தையும் நற்குணங்களையு மருளிச்செய்தது.

46. இராசராச பாண்டியனுக்குப் பன்றிமுகத்தையுடைய அப் பன்னிருவரையும் மந்திரிகளாக்கியருளியது.

47. கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்தருளியது.

48. நாரைக்கு முத்தி கொடுத்தருளியது.

49. மதுரைமாநகர வெல்லையைக் காட்டியருளும்படி பிரார்த்தித்த வம்சசேகர பாண்டியனுக்குத் தமது கையில் கங்கணமாகத் தரித்திருக்கும் அரவத்தினால் எல்லை காண்பித்தருளியது. (திருவாலவாய்)

50. வம்சசேகர பாண்டியனுக்கு படைத்துணைவராய்ச் சென்று சுந்தரம் என்று பெயர் தீட்டி அம்பெய்தருளியது.

51. நக்கீரதேவர், கபிலதேவர், கல்லாடனார், பாணதேவர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள் முதலிய (தமிழ்மறையிற் பொய்யடிமை யில்லாத புலவரெனக் கூறிய) சங்கத்தாரெனும் புலவர்களுக்குச் சங்கப்பலகை கொடுத்தருளியது.

52. சண்பக பாண்டியனென்னுஞ் காரணப்பெயரையுடைய வம்ச சூடாமணி பாண்டியன் ஆசங்கை நீங்கக் கவிபாடி தருமியெனும் ஆதிசைவனுக்குக் கிழியறுத்துக் கொடுத்தருளியது.

53. கவிக்குக்குற்றங் கூறிய நக்கீரனைப் பொற்றாமரைக் குளத்திலாழ்த்தி பின் கரையேற்றியருளியது.

54. நக்கீரனுக்கு அகத்தியமுனிவர்பால் இலக்கண முபதேசித்தருளியது.

55. கடைச்சங்கத்தாராகிய நாற்பத்தெண்மருள் ஏற்பட்ட கலகத்தை வணிககுலத்தில் ஊமையாய்ப் பிறந்த ஐந்து பிராயமுடைய உருத்திர சருமனால் தீர்த்தருளியது.

56. இடைக்காடர் பாடிவந்த தமிழ்ச்செய்யுளை பொறாமையினால் அவமதித்த குலேசபாண்டியனோடு பிணங்கிய இடைக்காடருடைய பிணக்குத் தீர்த்தருளியது.

57. சோமசுந்தரக்கடவுள் வேதப்பொருளை உபதேசஞ் செய்யுங்கால் பராமுகமாகக் கேட்ட உமாதேவியாரை பரதவகுலத்தில் அவதரிக்கும்படி ஆஞ்ஞை செய்தும் திருநந்திதேவரை சுறாவாகச் சபித்தும் வேண்டுகோட்கிரங்கி பரதவவேடங்கொண்டு அச்சுறாமீனைப் பிடித்தும் அவ்வம்மையாரைத் திருமணமுஞ் செய்தருளியது.

58. திருவாதவூரில் அவதரித்தும் மதுரையை யரசுசெய்த அரிமர்த்தனபாண்டியனிடம் முதன்மந்திரியாராக அமர்ந்தும் தென்னவன் பிரமராயன் என்னும் சிறப்புப்பெயர் பெற்றும் அவ்வரசன் உத்தரவுப்படி குதிரை வாங்கச் சென்ற வாதவூரடிகள் ஆவுடையார் கோயில் எனுந் திருப்பெருந்துறையில் கொண்டுபோன பொருளையெல்லாம் சிவபணிவிடைக்கு உதவும்படிசெய்தும் அவ்வாதவூரடிகளுக்கு மாணிக்கவாசகனெனுந் தீக்ஷாநாமமிட்டும் ஞானோபதேசஞ் செய்தருளியது.

59. கூறியபிரகாரம் குதிரை வாராமையால் பொருளைத் தரும்பொருட்டு அரசன் வாதவூரடிகளைத் துயருறும்படி செய்ய, அதுபொறாது வனநரிகளை வாம்பரிகளாக்கித் தந்தருளியது.

60. அப்பரிகளையே மீட்டும் நரிகளாகச் செய்தருளியது.

61. வாதவூரடிகளை அரசனாணைப்படி தண்டலாளர்கள் வருத்த பெருமான் அவருடைய செய்கைகளை யெல்லாம் அரிமர்த்தனபாண்டியனுக்கு உணர்த்தவும், தமது திருமுடியிலே மண் சுமக்கவும், வந்தி யென்னும் முதியாளைச் சிவலோகத்திற் சேர்க்கவுந் திருவுளங்கொண்டு வைகை நதியைப்



பெருகச்செய்தும், நகரிலுள்ளோர் கரையடைக்கத் தொடங்க, தவத்தால் நிறைந்தவளும், பிட்டு விற்றுண்பவளும், தான் நாடோறும் விற்கும் பிட்டினை முதலிலேசோமசுந்தரக் கடவுளை அன்பினாலே அருந்துவிப்பவளுமாகிய வந்தியின் பொருட்டுக் கூலியாளாய்ச் சென்று பிட்டுண்டு மண்சுமந்துங் கரையடைக்காதிருந்தமையால் அரசனடித்த பிரம்படியைப் பெற்று சோதிவ்வுருவியாகிய சோமசுந்தரக்கடவுள் கூடையோடு மண்ணை உடைப்பிலே கொட்டிவிட்டு உடனே மறைந்தருளி அவ்வடியை அகில சராசரங்களும் பெறச்செய்து தாமே எல்லாவற்றினும் அந்தரியாமி என்றறிவித்தருளியது.

62. கூன்பாண்டியன் முன் செய்த தீவினையினாலே சமணர்களுடைய போதனையிலகப்பட்டு ஆருகதனானமையால் பாண்டியநாடு முழுதிலும் வைதிக சைவங் குன்றவும் ஆருகதமாகிய இருள் மூடவும் அரசனுடைய மனைவி மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரெனும் மந்திரியாருமாத்திரஞ் சைவசமயத்தில் ஈடுபட்டவர்களாய் அமண்சமயமிகச் சிவசமயந் தாழ்ந்ததைக் குறித்து மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சமண்வலையிலகப்பட்ட நமதரசன் எப்பொழுது மீள்வானோ வென்றிருவரும் கவலையுற்றிருக்கையில் சோமசுந்தரக்கடவுளைத் தெரிசிக்கும் பொருட்டு உத்தரதேசத்திலிருந்து வந்த வேதியரிடம் அறிவிக்க அதைச் சிரமேற்கொண்டு திருமறைக்காடெனும் வேதாரண்யத்திலெழுந்தருளியிருக்கும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளிடம் தெரிவிக்க அமண்சமயங் களையும்பொருட்டு மதுரைக்கு எழுந்தருளிய பிள்ளையாரை உடனிருந்த திருநாவுக்கரசு சுவாமிகள் தடுக்கவும் கேளாது வந்து இத்தலத்திலுள்ள வாகீசமுனிவரென்கின்ற சிவனடியார் திருமடத்திலெழுந்தருளியிருக்க அம்மடத்தில் சமணர் தீக்கொளுவ அதை யறிந்த பிள்ளையார் பாண்டியனுடைய ஏவலிற் செய்யப்பட்டதென்றறிந்து அத்தீயைப் பாண்டியனிடஞ் செல்லுமாறு (செய்யனே திருவாலவாய் மேவிய என்னுந்) திருப்பதிகமெடுத்து (பையவே சென்று பாண்டியற் காகவே என்று) பாட அது அரசனை வெப்புநோயென்னுஞ் சுரமாய்ப் பற்றிய அளவில் அதனைப் பிள்ளையார் (மந்திரமாவது நீறு என்னுந்) திருநீற்றுப்பதிகமோதி திருநீறிட்டுச் சுரத்தைப் போக்கியும் பிறவிக்கூனை நிமிர்த்தியும் நெடுமாற நாயனாரெனும் பெயருந் தந்தருளியது.

63. சமணர் பிள்ளையாரோடு வாதுபுரிந்து, நெருப்பிலிட்ட ஏடு கரியவும், பிள்ளையாரிட்ட ஏடு வேவாதிருக்கவும், பின் சமணர்கள் ஆற்றில்

ஏடெதிர்த்துச் செல்லும் வாதத்தை மேற்கொண்ட அதனையும் (வாழ் வந்தணர் என்னும்) திருப்பதிகத்தால் பிள்ளையாரே வென்றருளியும் இவ்வாறு தோற்ற அச்சமணர்களை அவர்கள் சம்மதத்தின்படி கழுவிலேற்றியருளியது.

64. திருஞானசம்பந்த சுவாமிகளால் திருப்புறம்பயத்தில் வன்னியும் கிணறும் இலிங்கமும் சாக்ஷியாக மணஞ்செய்யப்பெற்ற வணிகப்பெண்ணுக்கும் முன்னுள்ள அவளின் மூத்தாளுக்கும் ஏற்பட்ட கலகத்தில் அவ்வணிகப்பெண் பொருட்டு அவ்வன்னிமரமும், கிணறும், இலிங்கமும் இம்மதுரைக்கு வரவழைத்தருளியது.

சோமசுந்தரக்கடவுளுடைய திருவிளையாடல்கள் இன்னும் பலவுள. அவைகளையும் மேற்கூறியவைகளின் விரிவுகளையும் ஆலாஸ்ய மான்மியம் கடம்பவனபுராணம், சுந்தரபாண்டியம், திருவிளையாடற்புராண முதலிய புராணங்களிற் பார்க்கக்காணலாம்.

---

## ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுவரர்
# மாதவாரி உத்ஸவ விவரம்.

### சித்திரை மாதம்.

கார்த்திகை நக்ஷத்திரத்தில்—துவஜாரோகணம்.
எட்டாந்திருவிழா—ஸ்ரீ மீனாக்ஷியம்மையாருக்குப் பட்டாபிஷேகம்.
ஒன்பதாந்திருவிழா—திக்குவிஜயம்.
பத்தாந்திருவிழா—திருக்கலியாணம்.
பதினொராந்திருவிழா—மகாரதம்.
பன்னிரண்டாந்திருவிழா—சித்திரை நக்ஷத்திரத்தில் தீர்த்தம்.

பௌர்ணமி திதியோடுகூடிய சித்திரை நக்ஷத்திரத்தில்
தெய்வேந்திரன் பூஜை.

### வைகாசி மாதம்.

திருவாதிரை நக்ஷத்திரமுதல் விசாக மீறாக 10 நாள் வசந்த உத்ஸவம்.

### ஆனி மாதம்.

மகநக்ஷத்திரமுதல் மூலமீறாக 10 நாள் ஊஞ்சல் உத்ஸவம்.
உத்திர நக்ஷத்திரத்தில் ஆனித் திருமஞ்சன தெரிசனம்.



### ஆடி மாதம்.

ஆயில்ய நக்ஷத்திரமுதல் கேட்டை மீறாக 10 நாள் முளைக்கொட்டு உத்ஸவம்.

### ஆவணி மாதம்.

திருவாதிரை நக்ஷத்திரத்தில்—துவஜாரோகணம்.
1 முதல் 6 நாள் சந்திரசேகரர் உத்ஸவம்.
1-திருவிழா—கரிக்குருவிக்கு உபதேசம்.
2-திருவிழா—நாரைக்கு முத்திகொடுத்தல்.
3-திருவிழா—மாணிக்கம் விற்றல்.
4-திருவிழா—சங்கத்தாருக்குப் பலகைகொடுத்தல்.
தருமிக்குப் பொற்கிழியளித்தல்.
5-திருவிழா—உலவாக் கோட்டையருளல்.
6-திருவிழா—பாணபத்திரனுக்காக அங்கம் வெட்டியருளல்.

7-திருவிழா—வளையல்விற்றல். அன்று பகலில் இஷ்டப்பிரதேசுவராகிய நன்மைதருவார் ஆலயத்தில் சிவலிங்க பூசையும் இரவில் சோமசுந்தரப் பெருமானுக்குப் பட்டாபிஷேகமும்.

8-திருவிழா—திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியும் திருவாதவூர் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானும்வந்து குதிரைகயிறு மாறுதல்.

9-திருவிழா—பிட்டு உத்ஸவம்.
10-திருவிழா—விறகு விற்றல்.

அவிட்ட நக்ஷத்திரத்தில் தீர்த்தம். அன்றிரவு சுப்பிரமணியரும் மாணிக்கவாசகரும் விடைபெறல்.

### புரட்டாசி மாதம்.

பூர்வபக்ஷம் பிரதமைமுதல் நவமியீறாக 9 நாள் நவராத்திரி.

### ஐப்பசி மாதம்.

பூர்வபக்ஷம் பிரதமை முதல் சஷ்டியீறாக 6 நாள் கோலாட்ட உத்ஸவம்.

### கார்த்திகை மாதம்.

சதயநக்ஷத்திரத்தில்—துவஜா ரோகணம்.

கார்த்திகை நக்ஷத்திரத்தில்—அக்கினி சொரூபமாகிய சோதி தெரிசனம்.

திருவாதிரை நக்ஷத்திரத்தில்—தீர்த்தம்.

79813

# திருவாலவாய் மான்மியம்.

## மார்கழி மாதம்.

உதய நக்ஷத்திரமுதல் திருவாதிரை பீறுக 10நாள் எண்ணெய்க் காப்பு உத்ஸவம். பகலில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமி எழுந்தருளுதலும் திருவெம்பாவை பாடலும் திருவாதிரை நக்ஷத்திரத்தில் தெரிசனமும்.

அமரபக்ஷம் அட்டமிதிதியில் தை வீதியாகிய வெளிவீதியில் விருஷப வாகனரூடராய்த் திருவுலாக்கொண்டருளுதல்.

## தை மாதம்.

மாதப்பிறப்பு இரவு எல்லாம்வல்ல சித்தர் சமேதராக கல்லானைக்குக் கரும்புகொடுத்தல்.

சதய நக்ஷத்திரத்தில்—துவஜாரோகணம்.

டீ-க் திருவிழா வலைவீசுதலும் பரதவராஜன் குமாரியின் திருமணமும்.

திருவாதிரை நக்ஷத்திரம்— தீர்த்தம்.

ரக்ஷாபந்தனத்துடன் பூசநக்ஷத்திரத்தில் வண்டியூர் தெப்பக் குளத்தில் தெப்போத்ஸவம். அன்றிரவு, யானையெய்தருளிய திருவிளையாடல்.

## மாசி மாதம் மண்டலோத்ஸவம்.

தைமாதம் மக நக்ஷத்திரத்தில்—துவஜாரோகணம்.

மாசி மகத்தில்—தீர்த்தம்.

## பங்குனி மாதம்.

கார்த்திகை நக்ஷத்திரமுதல் உத்திர நக்ஷத்திர மீறுக 10-நாள் வெள்ளியம்பல உத்ஸவம்.

உத்திர நக்ஷத்திரம் பகல் பொன்னனையாளுக்குக் காட்சி கொடுத்தல்.

சுவாதி நக்ஷத்திரத்தில் திருப்பரங்குன்றத்தில் நடக்கும் ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் திருக்கலியாணத்திற்கு எழுந்தருளி அன்றிரவு மதுரைவந்து சேர்தல்.

---

குறிப்பு:—சித்திரை, ஆவணி, கார்த்திகை, தை, மாசி இவ்வைந்தும் பிரமோத்ஸவங்கள். ஒவ்வொரு உத்ஸவங்களும் பூர்வபக்ஷத்தில் தீர்த்த நக்ஷத்திரத்தைப் பிரதானமாகக்கொண்டு ஆரம்பித்து நடைபெறும்.